ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2103/34 - 2018 දෙසැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2018.12.28

*2103/34 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்படவுள்ள விடயங்கள், பணிகள், மற்றும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் ஆகியவற்றையும் சாட்டுதல் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாதலால்,

சொல்லப்பட்ட அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள விடயங்கள், பணிகள் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பன இவ்வறிவித்தல் திகதியிலிருந்து, இங்கு கீழ் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பெற்றவாறு அமையும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2018, திசெம்பர் 24.

1A - G 28932 — 400 (2018/12)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

**(1) டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வுசெய்தலும் மதிப்பிடுதலும் | 1. தகவல், தொடர்பாடல் தொழினுட்ப முகவராண்மை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் | ▪ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பசட்டம் (2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க) |
| 2. அனைவருக்குமாக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய வகையில் டிஜிட்டல் உட்டகட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் | 2. இலங்கை கணினிசார் திடீர் பதில் குழாம் | ▪ இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம் (2006 இல.19) |
| 3. அரச நிறுவனங்களுக்கிடையிலான டிஜிட்டல் மயப்படுத்துகையினூடாக அரசாங்க நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச சட்டங்களின் குறிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குகையில் உற்பத்திப்பெருக்கம் மற்றும் வினைத்திறமையை உயர்த்தும் வகையில் டிஜிட்டல் வளர்ச்சியின் ஆரம்பத்திற்கான வசதிகளை அளித்தலும் கண்காணித்தலும் | 3. சகல தகவல் தொழில்நுட்ப பூங்காக்களும் | ▪ வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 4. டிஜிட்டல் அறிவினை மேம்படுத்துவதற்குரிய நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல் | | |
| 5. சமூகத்தின் அனைத்து வகுப்பினர்களையும் தொடர்பாடல் பயன்பாட்டுக்காக ஈடுபடுத்தத் தேவையான திறமுறைகளை விருத்தி செய்தலும் தனியார் துறையுடனான கூட்டிணைப்பில் டிஜிட்டல் ரீதியான பொருளாதாரத்திற்காக வசதிகளை அளித்தலும் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(1) டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 6. தகவல் தொழில்நுட்பம் மற்றும் அத்துடன் தொடர்பானதொழில்களின் மேம்பாட்டுக்குரிய வசதிகளைஅளித்தல் | | |
| 7. சைபர் பாதுகாப்புத் தொடர்பான நிகழ்வுகள் தொடர்பாக முனைப்பாகத் தலையிடுதலும் அத்தகைய நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்கான தேசிய நிலையத்தின் நடவடிக்கைகள் மற்றும் அதன் மூலம் உரிய சட்டங்களைச் செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு டிஜிட்டல் தடவையியல் பரிசோதனைக்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளைஅளித்தல் | | |
| 8. டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்புத் தொடர்பான கணக்காய்வும் சைபர் பாதுகாப்புச் சேவை முகாமைத்துவ நடவடிக்கைகளும் | | |
| 9. டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பஅபிவிருத்திக்காகச் சர்வதேச ரீதியான ஒத்துழைப்புப் பெறுவதைஒருங்கிணைத்தலும் வசதிகளை அளித்தலும் | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 11. IIஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

## அட்டவணை

### (2) விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்
2. சர்வதேச ரீதியில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் நிகழும்ஆராய்ச்சிகளின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு இசைவாகக் கூடியவாறு உள்நாட்டு ஆராய்ச்சிகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் தேவையான வசதிகளை அளித்தல்
3. அறிவைஅடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்திக்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துதல்
4. விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் விரிவுபடுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
5. ஆராய்ச்சிகளுக்கும் ஆராய்ச்சி நிறுவகங்களுக்கும் வசதிகளை அளிப்பதன் ஊடாக ஆராய்ச்சிகளைத் திட்டமிடுதலும் மேற்கொள்ளுதலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

1. ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் நெனோடெக்னொலோஜி பிரைவேட் லிமிட்டெட்
2. தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்
3. தேசிய விஞ்ஞான மன்றம்
4. தேசிய விஞ்ஞான, தொழினுட்பவியல் ஆணைக்குழு
5. கோள்மண்டலக் காட்சிக்கூடம்
6. நவீன தொழினுட்பவியலுக் கானஆதர் சி. கிளார்க் நிலையம்
7. ஒத்திசைவு மதிப்பீடு பற்றிய இலங்கை ஏற்றங்கீகார சபை
8. இலங்கை கட்டளைகள் நிறுவகம்
9. இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு
10. புத்தாக்குநர் நிதியம்
11. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
12. தேசிய ஆராய்ச்சி மன்றம்
13. இலங்கை புலமைச் சொத்துக்கள் அலுவலகம்
14. தொழில், தொழில்நுட்பவியல் நிறுவனம்
15. விஞ்ஞான,தொழில்நுட்பமற்றும் புத்தாக்கச் செயலணி பணியகம்
16. பசுமைவிருத்திப் பணியகம்
17. மரங்கள் சார்ந்த உருவாக்க நிலையம்
18. ரெபோ தொழில்நுட்பத்துக்கான அதிசிறந்த நிலையம் (CERA)
19. விதாதா நிலையம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டம் (1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கம்)
- ஒத்திசைவு மதிப்பீட்டுக்கான இலங்கை ஏற்றங்கீகார சபைச் சட்டம் (2005ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கம்)
- (1984ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) இலங்கை நியமங்கள் நிறுவகச் சட்டம்
- (1979ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க) இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டம்
- இலங்கை ஆரம்பகற்கைகள் நிறுவகச் சட்டம் (1981ஆம் ஆண்டின் 55ஆம் இலக்கம்)
- (2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) புலமைச் சொத்துக்கள் சட்டம்
- (1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க) இலங்கைத் தேசியதொழில் கல்விநிறுவனச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த மற்றெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(2) விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 6. தகவல், நெனோ, ரொபோ பொறிசார் இலத்திரனியல் மற்றும் உயிரின தொழில்நுட்பவியலும் உள்ளிட்ட புதிய ஆராய்ச்சிகளி லிருந்தும் கண்டுபிடிப்புகளி லிருந்தும் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளையும் அறிவினையும் வியாபார சமூகம் உள்ளிட்ட மற்றைய தரப்புகளுக்குப் பெற்றுக்கொடுக்கத் தேவையானநடவடிக்கைஎடுத்தல் | | |
| 7. நியமங்களை விதித்தலும் நிர்வாகம் தொடர்பானஅலுவல்களும் | | |
| 8. வேறு அமைச்சு சார்ந்த விடய எல்லைக்குட்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களினால் மற்றும் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சிகளுக்காக தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல் | | |
| 9. புதியகண்டுபிடிப்புக்களில் மக்களை ஈடுபடுத்துவதற்கும் ஊக்கு விப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 10. விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களை மக்களிடையே அறிமுகப்படுத்தலும் அவைசார்ந்த தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதலும் | | |
| 11. இலங்கையில் இயங்கும் சகல ஆராய்ச்சி நிறுவனங்களையும் கூட்டிணைத்துக்கொண்டு தேசிய அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்காக முனைப்பான முறையில் பங்களிப்புச் செய்தல் | | |
| 12. சர்வதேச ரீதியிலான விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டிணைதலும் ஒத்துழைப்பு முறையிலான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(2) விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 13. பல்வேறு நாடுகளுடன் இருதரப்பு மற்றும் பல்தரப்பு ரீதியான ஒத்துழைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்தினை ஏற்படுத்துதல் | | |
| 14. கட்டுமான கைத்தொழிலின் ஊக்குவிப்புக்கும் அபிவிருத்திக்குமான ஆராய்ச்சிகளைச் செயற்படுத்தல் | | |
| 15. புலமைச் சொத்துக்கள் பற்றிய சர்வதேச சமவாயத்தை நிர்வகிப்பதற்குரிய கருமங்களின் வெளியீட்டு உரிமை மற்றும் உலகப் புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் வெளியீட்டு உரிமை தொடர்பானகருமங்கள் | | |
| 16. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 17. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

## அட்டவணை

### *(3.)* பொதுவழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. பொதுவழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டநிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. கொள்கை கற்கைகள் நிறுவனம் | ■ இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவனச் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க)<br>■ வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்தவேறெல்லாச் சட்டங்களும் |
| 2. இலங்கையின் பொருளாதார நோக்குகளை அடைவதற்காக மேற்கொள்ள வேண்டிய பேரினப் பொருளாதார மறுசீரமைப்புகளைச் செயற்படுத்தக்கூடிய உபாய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துதல் | | |
| 3. இலங்கை மத்திய வங்கி மற்றும் சகல அமைச்சுக்களையும் ஒருங்கிணைத்த தேசியப் பொருளாதாரத்தில் மேற்கொள்ள வேண்டிய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளுக்காக தேசியப் பொருளாதார மன்றத்துக்கு உதவியளித்தல் | | |
| 4. தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருமானத்தின் விருத்திக்காகக் குறுகியகால, நடுத்தரகால மற்றும் நீண்டகால உபாயமுறையிலான மறுசீரமைப்புக்களை முன்மொழிதல் | | |
| 5. பொருளாதாரமறுசீரமைப்பைச் செய்வதற்குத் தேவையான நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(3.) பொதுவழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 6. பசுமைப் பொருளாதார உபாய முறைகளை அறிமுகப்படுத்தி நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான யோசனைகளைத் தயாரித்தல் | | |
| 7. வாழ்க்கைச் செலவினை முகாமை செய்வதற்கான உபாய வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல் | | |
| 8. தொழில் இன்மையை ஒழித்துக் கட்டுவதற்கான உபாயமுறையிலான திட்டங்களை அறிமுகப்படுத்துதல் | | |
| 9. இலங்கையின் வறுமையை ஒழித்துக்கட்டுவதற்கானசமூகப் பொருளாதார மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துதல் | | |
| 10. மக்களின் பொதுத்தேவைகள் மற்றும் அவசர வழங்கல் சேவைகளை வினைத்திறமையுடன் நிறைவேற்றுதல் | | |
| 11. அனர்த்த மற்றும் தீடீர் தேவைகள் எழும்போது அத்தியாவசிய பொது வழங்கல் சேவைகளைக் கூட்டிணைத்தல் | | |
| 12. பொது வழங்கல்கள் சேவையை பயனுறுதி வாய்ந்ததாகப் பேணக்கூடிய வளர்ச்சியடைந்த தொழில்நுட்ப வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல் | | |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.